# "Historical Perception of Mantivu In Batticaloa"

By

NAME : MR.YOGESWARAN JEYATHARSAN

REG. NO : EU/IS/2011/AC/437

INDEX NO : CS 4737

The Dissertation Submitted For The Partial Fulfillment of The Requirements For The Degree of Bachelor of Arts (Special) In History In The Faculty of Arts And Culture, Eastern University, Sri Lanka.

FAC506
Project Report
Library - EUSL

LIBRARY
22 JUN 2018
EASTERN UNIVERSITY, SRI LANKA.

DEPARTMENT OF HISTORY

FACULTY OF ARTS AND CULTURE

EASTERN UNIVERSITY

SRI LANKA

2017

PROCESSED
Main Library, EUSL

# முன்னுரை

இலங்கையில் பிரித்தானியர் வருகையைத் தொடர்ந்து வர்த்தகத்தில் பெரிதும் இலாபம் திரட்டி தங்களுடைய தாய் நாட்டில் செல்வங்களை குவிப்பதற்காக குடியேற்ற நாட்டுக் கொள்கையினடிப்படையில் பெருமளவு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் திட்டங்களில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்தனர். இதனால் இலங்கையின் சமூகப் பொருளாதார நிலைமைகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டது. குறிப்பாக வர்த்தகம், நீர்பாசனம், விவசாயம், போக்குவரத்து, கல்வி, சட்டசபை ,சமய நடவடிக்கைகள், தபால் மற்றும் தந்தி சேவை, துறைமுக அவிருத்தி என்பவற்றோடு மிசனரிகளின் உதவியோடு பிரித்தானிய முடிக்குரிய அரசாங்கம் பல்வேறு மக்கள் நலனோம்புத்திட்டங்களை இலங்கையின் பல பாகங்களிலும் நடைமுறைப்படுத்தியிருந்தது. அவ்வகையில் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு பிரதேசத்தில் கல்வி மற்றும் மருத்துவம் தொடர்பில் மிசனரிகளின் சேவை அதிகமானதாகக் காணப்பட்டது. இக்காலத்தில் இங்கு காணப்பட்ட சமூக வேறுபாடுகளினால் ஏற்பட்ட முரண்பாடுகளை தீர்க்க கல்வியை ஒரு ஆயுதமாக கொண்டு பல்வேறு பாடசாலைகளை ஆரம்பித்ததோடு இக்காலத்தில் பரவிய நோயினால் சமூகத்தினால் வெறுக்கப்படடு ஒதுக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்யும் நோக்கோடு பல வைத்தியசாலைகளையும் நிறுவி மக்களுக்கான சேவைகளை வழங்கினார்கள்.

இவ்வாறான சமூகப் பின்னணியில்தான் 1910 ஆம் ஆண்டு மார்ச் 22 இல் மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டது. மார்ச் 22, 1910 ஆம் ஆண்டில் (Fr.Robichez) தகவலின் பிரகாரம் இத்தீவுக்கு ஒரு உரோம் மிஷேலான (M.de.St.Michel) விஜயம் செய்து ஆலோசித்த பின்னர் அத்தீவில் அடித்தளம் போடப்பட்டு பின்னர் அதன் கட்டட நிர்மான வேலைகள் மற்றும் சேவையாளர், உழியர் ஏற்பாடுகள் என்பன ஒழுங்கு செய்யப்பட்டு 1921 ஆம் ஆண்டு மார்ச் 01 இல் பிரான்சிஸ் மிசனரி கன்னியாஸ்திரிகளின் உதவியோடு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்றிலிருந்து காலஞ் சென்ற பண்டாரநாயக்கா அரசாங்கத்தில் வெளிநாட்டவர்கள் இந்நாட்டில் நிர்வாகம் செய்யதடை ஏற்படும் வரைக்கும் அவர்களின் பொறுப்பிலேயே இருந்தது. பின்னர் இன்று வரை இலங்கை அரசின் சுகாதார திணைக்களத்தின் கீழேயே இவ் வைத்தியசாலை காணப்படுகிறது. இருப்பினும் பிரான்சிஸ் மிசன் கன்னியாஸ்திரிகள் இன்று வரைக்கும் ஏதோ ஒரு வடிவத்தில் அங்கு செல்வாக்குச் செலுத்திய வண்ணமே உள்ளனர்.

இக்காலப்பகுதியில் காலனித்துவக்காரர்களின் இலங்கை நோக்கிய வருகை, பிரித்தானியர்காலத்தில் வைத்தியசாலை அமைத்தலோடு தொடர்புடைய வரலாற்று சம்பவங்கள், அதனோடு தொடர்புடைய ஏனைய விடயங்களையும் "மட்டக்களப்பு மாந்தீவு ஒரு வரலாற்றுப்பார்வை" எனும் தலைப்பிலான ஓர் ஆய்வறிக்கையின் ஊடாக தரப்பட்டுள்ளது. அந்தவகையில் மாந்தீவு சார் வரலாற்று நிகழ்வுகளை பிரித்தானியர் கால ஆண்டறிக்கைகள், நீலப்புத்தகங்கள், பிரான்சிஸ் மிசனரி கன்னியாஸ்திரிகளின் குறிப்புக்கள், ஆண்டுமலர்கள், ஏனைய நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் நேர்காணல்கள்

மூலம் பெற்றுக் கொண்ட தரவுகளினடிப்படையில் இவ்வாய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வானது ஐந்து அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. முதலாவது அத்தியாயம் ஆய்வுத்தலைப்பு, ஆய்வின் அறிமுகம், ஆய்வின் நோக்கம், ஆய்வின் முக்கியத்துவம், ஆய்வு வரையறை, ஆய்வு கருதுகோள், ஆய்வு பிரச்சினை, ஆய்வு முறையியல், இவ்வாய்வு பற்றிய இலக்கிய மீளாய்வுகள், ஆய்வு இடைவெளி, அத்தியாய ஒழுங்கமைப்பு ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

இரண்டாவது அத்தியாயமானது இலங்கையில் காலனித்துவம் உருவான வரலாறு, இலங்கை நோக்கிய போர்த்துகேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரின் வருகை மட்டக்களப்பில் அவர்களின் செல்வாக்கு போன்ற பகுதிகளைக் கொண்டதாக காணப்படுகிறது.

மூன்றாம் அத்தியாயம் மட்டக்களப்பு மாந்தீவு அறிமுகம், மாந்தீவு வைத்தியசாலையின் வளர்ச்சி, கிழக்கிலங்கையில் தொழுநோயளர் வைத்தியசாலையின் தேவை, நிர்வாகம், சமூகம், கட்டுமானம்சார் வளர்ச்சி, திருச்சபையாரின் மனிதநேயப்பணிகள், இலங்கையில் தொழுநோயாளர் வைத்தியசாலையின் வளர்ச்சி எனும் தலைப்புக்களில் ஆராயப்பட்டுள்ளது.

நான்காம் அத்தியாயம் இவ் வைத்தியசாலையின் சமகால நிலை மற்றும் எதிர்காலத்தில் இவ்வைத்தியசாலையின் நிலை என்ன இது ஒரு சுற்றுலா மையமாக்கப்பட பொருத்தமான ஒன்றா என்ற அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

ஐந்தாவது அத்தியாயம் வைத்தியசாலை தொடர்பான மதிப்பீடாக அமைந்துள்ளது.

இவ்வாய்வானது வரலாற்று அணுகுமுறையுடன் சேர்ந்த ஆய்வாகக் காணப்படுகின்றதால். இத்தீவு பற்றிய பிற்கால ஆய்விற்கான நெறிப்படுத்தலை ஏற்படுத்தக் கூடும்.

-ஆய்வாளர்-

# உள்ளடக்கம்


உறுதியுரை

முன்னுரை

நன்றியுரை

**அத்தியாயம் ஒன்று**

1.0 ஆய்வு அறிமுகம் 2-11

**அத்தியாயம் இரண்டு**

2.0 இலங்கையில் காலனித்துவம் உருவான வரலாறு 13-23

**அத்தியாயம் மூன்று**

3.0 மட்டக்களப்பும் மாந்தீவும் 25-52

**அத்தியாயம் நான்கு**

4.0 மாந்தீவின் சமகால நிலை 54-68

**அத்தியாயம் ஐந்து**

5.0 தொகுப்புரை 70-74

பின்னிணைப்புக்கள் 75-82

6.0 உசாத்துணைகள் 83


**அட்டவணைகள்**


1. அட்டவணை (1) 31
2. அட்டவணை (2) 56
3. அட்டவணை (3) 57